V8T

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டு பொதுத்தேர்வு - டிசம்பர் 2025

-----

வகுப்பு 8

தமிழ்

கால அளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

பகுதி - I

அ) சரியான விடையைத் தேர்வு செய்க 10×1=10

1) பாடல் இலக்கியாவால் பாடப்பட்டது - என்பது .........
அ) செய்வினை ஆ) செயப்பாட்டுவினை
இ) தன்வினை ஈ) பிறவினை

2) என்று+ஆய்ந்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
அ) என்றாய்ந்து ஆ) என்றுஆய்ந்து இ) என்றய்ந்து ஈ) என்ஆய்ந்து

3) மாடு வயலில் புல்லை மேய்ந்தது - இத்தொடரிலுள்ள வினைமுற்று ...........
அ) மாடு ஆ) வயல் இ) புல் ஈ) மேய்ந்தது

4) மறைபொருளைக் காத்தல் ............. எனப்படும்
அ) சிறை ஆ) அறை இ) கறை ஈ) நிறை

5) பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் .............
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

6) சமையலறையில் செலவிடும் நேரம் ........... செலவிடும் நேரமாகும்
அ) சுவைக்காக ஆ) சிக்கனத்திற்காக இ) நல்வாழ்வுக்காக ஈ) உணவுக்காக

7) வானமளந்தது - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........
அ) வான+மளந்தது ஆ) வான்+அளந்தது இ) வானம்+அளந்தது ஈ) வான்+மளந்தது

8) ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ............
அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு

9) பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ...........
அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள் இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

10) என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு ........ பெருகிற்று.
அ) காரி ஆ) ஓரி இ) வாரி ஈ) பாரி

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக 5×1=5

11) உலக வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது ........... என்னும் அறிவுக்கலை
12) சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் .............
13) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ..............
14) பெரிய கப்பல்கள் ............ மீது செல்லும்
15) வானில் கரு .......... தோன்றினால் மழை பொழியும் என்பர்.

இ) பொருத்துக 5×1=5

| | | |
|---|---|---|
| 16) | ஆடினாள் | - நாவின் முதல், அண்ணத்தின் அடி |
| 17) | திருத்தினான் | - நாவின் இடை, அண்ணத்தின் இடை |
| 18) | க், ங் | - நாவின் நுனி, அண்ணத்தின் நுனி |
| 19) | ச், ஞ் | - பிற வினை |
| 20) | ட், ண் | - தன் வினை |

பகுதி - II

குறுகிய விடையளி

அ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி. 4×2=8

21) உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
22) தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
23) பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
24) சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?
25) தமிழ் யாரால் காக்கப்பட்டதாகத் தமிழழகனார் கூறுகிறார்?

ஆ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி. 4×2=8

26) ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
27) நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
28) திரு.வி.க சங்கப் புலவர்களாகக் குறிப்பிடப்படுபவர்களின் பெயர்களை எழுதுக
29) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
30) சேர நாடு - குறிப்பு வரைக.

இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி. 2×2=4

31) ஏற்றினான் என்பது எவ்வகை வினை என்பதை விளக்குக
32) வினைமுற்று என்றால் என்ன?
33) பிறிதுமொழிதல் அணி என்பது யாது?

Scanned with Cam

TNPSC JOB



## பகுதி - III

அ) சிறுவினா. 3×4=12

34) திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?

(அல்லது)

தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக

35) தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க கூறுவனவற்றை எழுதுக

(அல்லது)

கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக

36) சொற்பொருள் பின்வருநிலை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக

(அல்லது)

தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

ஆ) சிந்தனை வினா(எவையேனும் இரண்டனுக்கு மட்டும்). 2×5=10

37) கைவினைக் கலைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும்இடையேயுள்ள தொடர்பு குறித்து எழுதுக

38) வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புநலன்களாக நீங்கள் கருதுவன யாவை?

39) தற்காலத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக

## பகுதி - IV

அடிபிறழாமல் எழுது. 4+2=6

40) மாமழை போற்றுதும் .......... எனத் தொடங்கும் சிலப்பதிகார மனப்பாடப் பாடலை எழுதுக

(அல்லது)

ஆற்றுதல் ......... எனத் தொடங்கி செறாஅமை வரை பாடறிந்து ஒழுகுதல் மனப்பாடப் பாடலை எழுதுக

41) 'சொல்' - என முடியும் திருக்குறளை எழுதுக

## பகுதி - V

மொழிப்பயிற்சி (எவையேனும் நான்கு மட்டும்) 4×2=8

42) கலைச்சொல் தருக

அ) HORN ஆ) REFORM

43) பின்வரும் மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக

அ) முதலைக் கண்ணீர் ஆ) வாழையடி வாழையாக

44) கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக

அ) கடமையைச் செய்

ஆ) பாரதியார் பாடல்களின் இனிமை தான் என்னே!

45) பின்வரும் தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக

அ) தேர்த் திருவிலாவிற்குச் சென்றனர்

ஆ) வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்லது

46) பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக

அ) கபிலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாட போகட்டுமா என்று கேட்டான்

ஆ) திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ் பெற்றது

47) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

அ) வண்டி இழுப்பது ............ (காலை/காளை)

ஆ) பூ .......... வீசும். (மனம்/மணம்)

## பகுதி - VI

விரிவான விடையளி. 3×8=24

48. 'காலம் உடன் வரும்' கதையைச் சுருக்கி எழுதுக

(அல்லது)

திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக

49) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக

(அல்லது)

கொங்கு நாட்டின் உள்நாட்டு வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக

50) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக

முன்னுரை - இலக்கண இலக்கிய வளம் - யாமறிந்த மொழிகளிலே - உலகப் பொதுமறை - மொழிபெயர்ப்பு நூல்கள் - முடிவுரை

(அல்லது)

இருப்பிடச்சான்றிதழ் வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

- - - - -

Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com